IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS :வாசா.2

Solemnly affirmed and sworn by Mrs.R.Lakshmi, Junior Assistant on 18.03.2024 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 217-2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை/கணவர் பெயர் | ஆண்டிச்சாமி | கிராமம் | சுல்தான்பேட்டை |
| தொழில் | உதவி பொறியாளர் பாசனப்பிரிவு | மதம் | |
| வயது | | | |

வாசா. 2 ஆக 18.03.2024 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் நீதிமன்றத்தில இருந்து வந்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பரம்பிகுளம் ஆழியாறு திட்ட உதவி பொறியாளர் பாசனப்பிரிவு சுல்தான்பேட்டையில் பணிபுரிகிறேன். என்னுடைய சூலுர் தாலுக்கா மலைப்பாளையம் கிராமத்தில் க.ச.எண். 59 மற்றும் 40 நம்பர் காலைகளில் செல்லும் PAP வாய்ககால் பற்றி சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டிருந்தது.1962 முதல் 1965 வரை திட்ட காலம். 1965 ம் வருடம் மேற்படி பரம்பிகுளம் ஆழியாறு திட்டம் முடிவடைந்தது. PAP வாய்க்கால் பட்டா நிலத்திற்குள்ளும் செல்லும் அரசாங்க நிலத்திற்குள்ளும் செல்லும். மேற்படி வாய்க்காலை ஒட்டி அனைத்து பகுதிகளிலும் ஒரு தடம் ஜீப் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். அந்த ஜீப் தடம் pap க்கு கட்டுப்பட்ட பொதுப்பணித்துறையின் தடம். அது தனிப்பட்ட

நபர்களின் வண்டி வாகனங்கள் செல்ல பயன்படுத்த அனுமதி இல்லை. அது அரசாங்க அதிகாரிகளின் PAP வாய்ககால் பராமரிப்பு மற்றும் ஆய்விற்காக விடப்பட்ட தடம்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

PAP வாய்ககாலை ஒட்டி உள்ள ஜீப் தடத்தில் நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியும் என்றால் ஆமாம். அந்த தடத்தை மறைக்கும் விதமாக கேட் எதுவும் அமைக்கவில்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/விஜய்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur